**உதவி அமர்வு நீதிமன்றம், தேவகோட்டை**

**---**

**முன்னிலை: திருமதி. பா.கலை நிலா, எம்.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி,**

**தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ம் நாள் திங்கள்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 16-ம் நாள்**

**<u>அமர்வு வழக்கு எண் 188/2022</u>**

**TNSV05-001016-2022**

(காரைக்குடி வடக்கு காவல் நிலைய குற்ற எண்.130/2016, காரைக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண் 33/2022)

| | | |
|---|---|---|
| புகார்தாரர் | - | வடக்கு காவல் ஆய்வாளர்,<br>காரைக்குடி காவல் நிலையம்,<br>காவல் நிலைய குற்ற எண்.130/2022 |
| எதிரிகள் | - | 1. ராஜசேகரன் (இறந்து விட்டார்)<br>2.ராஜேஷ்குமார்<br>3. கார்த்திகேயன்<br>4. லதா |
| குற்றச்சாட்டு | - | <u>குற்றச்சாட்டு :-</u><br>2, 3, 4 எதிரிகள் அசிங்கமாக பேசி, அரிவாளால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்து உடந்தையாக இருந்ததற்கு. |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | | 2, 3, 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 109, 307 இதச r/w 34 IPC-ன் கீழ் அசிங்கமாக பேசியும், கொலை மிரட்டல் செய்து, உடந்தையாக இருந்ததற்கு. |
| நீதிமன்றத்தின் தீர்ப்பு | - | எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 109, 307 இதச r/w 34 IPC-ன்படி குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து மேற்படி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| சான்று பொருள் குறித்த உத்தரவு | – | இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட அ.சா.பொ.1 அருவாள், அ.சா.பொ.2 இரத்தம்படாத மண், அ.சா.பொ.3 இரத்தம்பட்ட மண் ஆகிய பொருட்களை பொறுத்து மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு உரிய வழிமுறையாக புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்து அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு கடந்த 11.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 திரு.பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.KR.திருப்பதி அவர்கள் முன்னிலையாகியும், 3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் திரு.M.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கின் வாதிக்கும் வாதியின் அண்ணன் மனைவி மகன் மற்றும் மருமகன் ஆகியோர்களுக்கு இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்ததாகவும், இதன் காரணமாக அவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டு 1–வது எதிரி கடந்த 06.02.2016ம் தேதி வாதிக்கு சொந்தமான மோட்டாரை திருடியும், வாதியை அடித்தும் கொலை மிரட்டல் செய்ததால் 1–வது எதிரி மீது காரைக்குடி வடக்கு காவல் நிலைய குற்ற எண்.130/2016 120(பி), 109 இதச r/w 34 IPC–ன்படி வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டதாகவும், கடந்த 08.03.2016–ம் தேதி 08.30 மணிக்கு 4வது எதிரியின் வீட்டில் வைத்து எதிரிகள் 1, 2, 3 ஆகியோர் ஒன்று சேர்ந்து செட்டியார் உனக்கு சொத்து தரமாட்டான் உன்னை ஜெயிலிலும் வைத்துவிட்டான் இவனை இப்படியே விட்டால் உன்னோடு சேர்ந்து

நாங்களும் வீட்டை காலி செய்து விட்டு கிளம்ப வேண்டியதுதான் இவனை போட்டுவிட்டால் நம்முடன் மோதமாட்டான் என திட்டம் தீட்டி கடந்த 13.03.2016 ம் தேதி பகல் 13.15 மணிக்கு சாட்சி 1 இராமநாதன் காரைக்குடி டி.டி.நகர் முதல் வீதியில் தனது வீட்டு உட்புறம் நின்று கொண்டிருக்கும்போது, எதிரிகள் 1, 2, 3 ஆகியோர் வீட்டிற்கு வந்து எதிரிகள் 2, 3 வெளியில் நின்று கொண்டு ஆள் பார்க்க 1–வது எதிரி வீட்டின் முகப்பில் நின்றிருந்த சாட்சி–1 இராமநாதனை ஏண்டா தாயோழி தேவடியா பயலே என்னையாடா ஜெயிலில் வைக்கிற என்று சொல்லி தான் கையில் மறைத்து வைத்திருந்த அருவாளால் இத்தோட செத்து தொலைடா என சொல்லி இடது பக்க தலை இடது கை புஜம் வலது பின் பக்க இடு வலது கால் முட்டி இடது கால், தொடை ஆகிய இடங்களில் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், எனவே, 1 வது எதிரி இதச பிரிவு 294(b), 120(b), 109, 307 IPC– r/w 34 IPC–ன்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்றும், எதிரிகள் 2, 3, 4 ஆகியோர்களுக்கு இதச பிரிவுகள் 120(பி), 109, 307 இதச r/w 34 IPC–ன் படியும் தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்துள்ளார்கள் என்றும், காரைக்குடி வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) வழக்கு கோப்புகளை ஆராய்ந்து அறிவார்ந்த நீதித்துறை நடுவர், காரைக்குடி விசாரணைக்கு எடுத்து எதிரிகளுக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்து கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு பின்னர் இவ்வழக்கில் கண்ட குற்றம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தினால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்ற வகையில் சிவகங்கையிலுள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு

அங்கு அமர்வு வழக்கு எண்.188/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

3) மேற்கண்டவாறு இவ்வழக்குக் கோப்புகள் இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்ற பின்னர் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை ஆய்வு செய்தும் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் இருப்பதாகக் கருதியதால் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 120(b), 109, 307 IPC- r/w 34 IPC-ன் படியும், 2 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(பி), 109, 307 இதச r/w 34 IPC-ன்படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக்கூறி வினவ எதிரிகள் குற்றத்தை மறுத்தனர்.

4. இவ்வழக்கில் 1வது எதிரி இறந்து விட்டதால் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டு அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.

5. எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் 11 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையான ஆவணங்கள் மற்றும் சா.பொ.1, 2 மற்றும் சா.பொ.3 குறியிடப்பட்டுள்ளன.

6) **<u>அரசு தரப்பு வழக்கு சாட்சியங்களின் சுருக்கம் :</u>**

அ.சா.1 இராமநாதன் தனது சாட்சியத்தில், தான் காரைக்குடி டி,டி.நகர் முதல் வீதியில் மீனாட்சி இல்லத்தில் வசித்து வருவதாகவும், எதிரிகளை தெரியும் எனவும், வழக்கின் சாட்சிகள் கணேசன், ஆறுமுகம், சிதம்பரம் ஆகியோர்களை தெரியும் எனவும், தங்கள் குடும்பத்தற்கு சொந்தமான மோட்டரை 1வது எதிரி ராஜா என்ற ராஜசேகர் திருடி சென்றதாகவும், அது சம்மந்தமாக காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் செய்ததாகவும், அதன் அடிப்படையில் 1வது எதிரி சிறைக்கு சென்றதாகவும், கடந்த 08.03.2016 ம் தேதியில் ரமேஷ் மற்றும் ராமையாவும் கடைசி வீட்டுப்பக்கம் போகும்போது அந்த வீட்டில் இருந்த லதா, ராஜேஸ்குமார், கார்த்தி, ராஜா

என்ற ராஜசேகர் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தார்கள் என ராமையாவும், ரமேஷ்–ம் தன்னிடம் சொன்னதாகவும், கடந்த 09.03.2016 ம் தேதியில் மேற்சொன்ன விபரங்களை ராமையாவும், ராமேஷ்–ம் தன்னிடம் வந்து கூறியதாகவும், தான் அப்போது அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை எனவும், பின்பு கடந்த 13.03.2016 ம் தேதி மதியம் 01.15 மணிக்கு கார்த்திக் என்பவரையும், ராஜேஸ் குமார் என்பவரையும் வேவு பார்க்க வைத்து அத்துமீறி தன் வீட்டிற்குள் நுழைந்து இடுப்பில் வைத்திருந்த அருவாளை எடுத்து தூக்கி காண்பித்து கெட்ட வார்த்தையில் தேவுடியா பயலே, கண்டார ஓலி, புண்டை மகனே, திருட்டுப்பயலே மொள்ளமாறி பயலே என்று கூறி என்னை ஜெயிலில் 1 வாரம் உள்ளே வைத்துவிட்டாய் என்றும், தன்னுடைய குடும்ப சொத்து உனக்கு கிடைக்காத வகையில் பண்ணிவிடுவேன் என்றும் நீ உயிரோடு இருந்தால் தானே சொத்தை அனுபவிப்பாய், நீ இத்தோடு தொலைந்தாய் என்று அரிவாளால் தன்னை சரமாரியாக ராஜா என்ற ராஜகேசர் வெட்டியதாகவும், ராஜா என்ற ராஜசேகர் தன்னை கொலை செய்கிறார் என்று அலறி சத்தம் போட்டதாகவும், அந்த அலறல் சத்தம் கேட்டு அந்த வீதியில் பூச்செடி கடையில் வேலை பார்க்கும் ஆறுமுகமும், சிங்கப்பூர் சாப்பிங் சென்டர் வைத்து இருக்கும் கணேசனும் தான் விழுந்து கிடந்த இடத்திற்கு வந்து விட்டதாகவும், அவர்களிடம் தான் ராஜா என்ற ராஜசேகர் தான் தன்னை சாக அடிப்பதற்காக அரிவாளால் வெட்டி விட்டார் என்று சொன்னதாகவும், உடனே ராஜா என்ற ராஜசேகர் அடே நீ இன்றைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் என் கையால் தான் உனக்கு சாவு என்று அரிவாளை காண்பித்து விட்டு அரிவாளுடன் ஓடிவிட்டதாகவும், பிறகு கணேசனும், ஆறுமுகமும் தெருவில் இருந்த ஆட்டோவில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், சிறிது நேரத்தில் காரைக்குடி வடக்கு காவல்

நிலையத்தில் இருந்து போலீஸ் வந்து தன்னை விசாரணை செய்ததாகவும், நடந்த சம்பவத்திற்கு தான் சொல்ல சொல்ல போலீஸார் புகார் வாக்குமூலம் எழுதிக்கொண்டதாகவும், மேல்சிகிச்சைக்காக தன்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறியதாகவும், தாங்களும் உடனடியாக ஆம்புலன்சில் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் எமர்சென்ஸி பிரிவில் சேர்ந்து சிகிச்சை மேற்கொண்டதாகவும், இந்த வழக்கு சம்மந்தமாக போலீஸார் தன்னை விசாரணை செய்ததாகவும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 எனவும் தன்னை தாக்க பயன்படுத்திய அரிவாள் சா.பொ.1 எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7) அ.சா.2 கணேசன் தனது சாட்சியத்தில், தான் காரைக்குடி கீழதெருவில் வசித்து வருவதாகவும், கடந்த 13.03.2016 ம் தேதியில் சுமார் மதியம் 01.00 மணியளவில் சாட்சி 1 ன் வீட்டிற்கு அருகாமையில் சிங்கப்பூர் சாப்பிங் நடத்திவருவதாகவும், அப்போது பூச்செடிக்கடை நடத்தி வரும் ஆறுமுகம் தன்னிடம் வந்து அப்பச்சியை வெட்டிவிட்டார்களாம் என்று சொன்னதாகவும், அப்போது தானும், ஆறுமுகமும் அங்கு சென்று பார்த்தபோது ரத்தக்காயத்தோடு இருந்ததாகவும், அப்போது ராமநாதன் கேட்டதற்கு ராஜா என்ற ராஜசேகர் தன்னை வெட்டி விட்டு சென்றதாக சொன்னதாகவும், அதன் பிறகு அவரை ஆட்டோவில் தானும், ஆறுமுகமும் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், அங்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறியதாகவும், அதன் மூலம் இராமநாதன் மனைவிக்கும், அவரது மகனுக்கும் போன் மூலம் தகவல் கொடுத்ததாகவும், தன்னை வழக்கு சம்மந்தமாக போலிஸார் விசாரணை செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

8) அ.சா.3 ஆறுமுகம் தனது சாட்சியத்தில், தான் தேவகோட்டை சருகணி ரோட்டில் உள்ள புதுக்குடியிருப்பு என்ற ஊரில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 13.03.2016 ம் தேதியில் தான் பூச்செடி கடையில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது இராமநாதன் அவர்கள் இரத்தக்கரையுடன் அந்த வீட்டின் கேட்டிற்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது தான் பதறிப்போய் அருகில் இருந்த ஆட்டோவில் ஏற்றி அருகில் சிங்கப்பூர் சாப்பிங்கில் இருந்த கணேசன் என்பவருடன் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், தன்னை வழக்கு சம்மந்தமாக காரைக்குடி வடக்கு போலிஸார் விசாரணை செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

9) அ.சா.4 சிதம்பரம் தனது சாட்சியத்தில், தான் காரைக்குடி கண்டனூர் ரோட்டில் வசிப்பதாகவும், கடந்த 13.03.2016 ம் தேதியில் மதியம் 01.30 மணியளவில் இராமநாதன் தனக்கு போன் செய்து ராஜா என்ற ராஜசேகர் தன்னை வெட்டி விட்டதாகவும், தற்போது காரைக்குடி பழைய அரசு மருத்துவமனையில் இருப்பதாகவும், தான் மருத்துவமனைக்கு சென்று இராமநாதனை பார்த்ததாகவும், அவருக்கு உடம்பு முழுவதும் வெட்டுப்பட்டு இருந்ததாகவும், மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறியதாகவும், தாங்கள் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்ததாகவும், அதன் பின்பு மருத்துவமனையில் தொடர்ந்து 15 நாட்களுக்கு குறையாமல் சிகிச்சை பெற்று வந்ததாகவும், வழக்கு சம்மந்தமாக போலிஸார் தன்னை விசாரணை செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

10) அ.சா.5 பழனியப்பன் தனது சாட்சியத்தில், தான் தற்போது சென்னை விருகம்பாக்கத்தில் வசித்து வருவதாகவும், சாட்சி இராமநாதன் தன் தகப்பனார் எனவும், பூங்கோதை தன் தாயார் எனவும், சாட்சிகள்

கணேசன், ஆறுமுகம், சிதம்பரம் ஆகியோர்களை தெரியும் எனவும், சாட்சி சபாரத்தினம் தன் சித்தப்பா எனவும், வழக்கின் எதிரியை தெரியும் எனவும், கடந்த 13.03.2016 ம் தேதியில் தான் சென்னையில் இருக்கும்போது மதியம் சுமார் 02.00 மணியளவில் காரைக்குடியில் இருந்து சிங்கப்பூர் சாப்பிங் சென்டர் நடத்தி வரும் கணேசன் என்பவர் தன்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் தகப்பனாரை எதிரி ராஜசேகர் என்பவர் அசிங்கமான வார்த்தைகளால் பேசியும், அவரை கேஸ் கொடுத்து மாட்டிவிட்டதாக சொல்லியும் வெட்டி விட்டதாகவும், மேலும் தன் தகப்பானரை கணேசனும், ஆறுமுகமும் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும், மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பரிந்துரை செய்ததாகவும், பின்னர் தன் உறவினர் சிதம்பரம் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்ததாகவும், பின் தான் சென்னையில் இருந்து புறப்பட்டு சுமார் இரவு 08.00 முதல் 09.00 மணியளவில் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த தன் தகப்பனாரை நேரில் சென்று பார்த்ததாகவும், வழக்கு சம்மந்தமாக போலீஸார் தன்னை விசாரணை செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

11) அ.சா.6 பூங்கோதை தனது சாட்சியத்தில், தான் காரைக்குடியில் டி.டி.நகரில் குடியிருந்து வருவதாகவும், இராமநாதன் கணவர், பழனியப்பன் மகன், சாட்சிகள் கணேசன், ஆறுமுகம், சிதம்பரம் ஆகியோர்களை தனக்குத் தெரியும் எனவும், வழக்கின் எதிரியை தனக்குத் தெரியும் எனவும், கடந்த 13.03.2016 ம் தேதியில் தான் பழனி முருகன் கோவிலுக்கு சென்று இருந்ததாகவும், சுமார் பகல் 01.45 மணியளவில் தனது கணவரை காரைக்குடியில் தன் வீட்டில் வைத்து வழக்கின் எதிரி இராஜசேகர்

என்பவர் அசிங்கமாக பேசியும், நீ தானே என்னை கேஸில் சேர்த்துவிட்டாய் என்று சொல்லியும் தன் கணவரை வெட்டிவிட்டதாக சிங்கப்பூர் சாப்பிங் சென்டர் வைத்து இருக்கும் கணேசன் என்பவர் தொலைபேசியில் சொன்னதாகவும், கணேசன் மற்றும் ஆறுமுகம் சேர்ந்து காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றதாகவும், பின்னர் மதுரை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்ததாகவும், பிறகு காயம் அதிகமாக இருந்ததால் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு சென்று தன் கணவர் சிகிச்சையில் இருந்தவரை தான் சென்று பார்த்ததாகவும், வழக்கு சம்மந்தமாக போலீஸார் தன்னை விசாரணை செய்தார்கள் எனவும், சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.7 சபாரத்தினம் தனது சாட்சியத்தில், தான் காரைக்குடியில் எண்.26, மீனாட்சி இல்லம், டி.டி.நகர் முதல் வீதியில் வசித்து வருவதாகவும், இவ்வழக்கின் சாட்சிகள் இராமநாதன் தன் அண்ணன் எனவும், பூங்கோதை அண்ணி எனவும், எதிரிகளான ராஜா என்ற ராஜசேகர், லதா ஆகியோர்களை தெரியும் எனவும், கடந்த 13.03.2016 ம் தேதி தானும், தன் மனைவியும் மற்றும் தன் அண்ணி பூங்கோதையும் சாமி தரிசனம் செய்வதற்காக பழனி கோவிலுக்கு சென்றிருந்ததாகவும், அன்று மதியம் 01.50 மணியளவில் கணேசன் என்பவர் தன் அண்ணிக்கு போன் மூலம் தன் அண்ணனை முன் விரோதம் காரணமாகவும், சொத்து பிரச்சனை காரணமாகவும், போலிஸில் புகார் கொடுத்ததன் காரணமாகவும், ராஜசேகர் என்பவர் வெட்டிவிட்டதாகவும், அவரது அலறல் சத்தம் கேட்டு கணேசன் என்பவரும், ஆறுமுகம் என்பவரும் வந்தபோது எதிரி என்றைக்கு இருந்தாலும் என்கையில்தான் உனக்கு சாவு என்று சொல்லிவிட்டு சென்றதாகவும், அதன் பின்னர் தன் அண்ணனை காரைக்குடி அரசு மருத்துவமனையில் கணேசன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் ஆட்டோவில்

கொண்டு சேர்த்ததாகவும், அங்கு முதல் உதவி செய்து, மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னதாகவும், பிறகு மதுரையில் உள்ள மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளதாகவும், அதன் பின் பழனியில் இருந்து மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சென்று தன் அண்ணனை பார்த்ததாகவும், தன்னை வழக்கு சம்மந்தமாக போலிஸார் விசாரணை செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

13) அ.சா.8 இராமையா தனது சாட்சியத்தில், தான் தற்போது காரைக்குடியில் குறிச்சிகண்மாயில் எண்.42/1 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், வழக்கு சாட்சி இராமநாதன் என்பவரை தெரியும் எனவும், அவருக்கு சொந்தமான வாடகை வீட்டில் தான் ஏற்கனவே வாடகைக்கு வசித்து வருவதாகவும், எதிரிகளாகிய ராஜசேகர் மற்றும் லதா என்பவரும் தான் வாடகை இருந்த லைன் வீட்டில் அவர்களும் வசித்து வந்ததாகவும், 1வது எதிரிக்கும், இராமநாதன் என்பவருக்கும் சொத்து சம்பந்தமான பிரச்சனை இருப்பதாக பேசிக்கொண்டதாகவும், கடந்த 13.03.2016ம் தேதி தான் விவசாயம் சம்மபந்தமாக வெளியூர் சென்றுவிட்டதாகவும், அப்போது ராஜசேகர் என்பவர் இராமநாதன் என்பவரை வெட்டி விட்டதாக தனக்கு தகவல் தெரிந்ததாகவும், பிறகு மறுநாள் மதுரை மீனாட்சி மீஷன் மருத்துவமனைக்கு சென்று இராமநாதனை பார்த்ததாகவும், இவ்வழக்கு சம்மந்தமாக போலிஸார் தன்னை விசாரணை செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

14) அ.சா.9 முத்தரசன் தனது சாட்சியத்தில், தான் தற்போது மதுரை அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், தான் கடந்த 2016ம் ஆண்டு காரைக்குடி

வடக்கு காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்த போது கடந்த 05.05.2016 ம் தேதி 08.00 மணிக்கு காவல் நிலையத்தில் கொடுத்த கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு காரைக்குடி கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்று நிலையக் குற்ற எண்.130/2016 இதச பிரிவுகள் 294(பி), 120(பி), 109, 307 இதச வழக்கின் பி.ஆர்.எண்.75/2016 ல் கண்டதை முத்திரையுடன் கூடிய மரப்பெட்டி ஒன்றையும், தபால் ஒன்றையும் பெற்றுக்கொண்டு இராமநாதபுரத்தில் உள்ள தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கடந்த 06.05.2016 ல் மேற்படி முத்திரையுடன் கூடிய மரப்பெட்டியும், தபாலையும் ஒப்படைத்ததாகவும், அங்கு ஆர்எம்ஓ/பயோ/34/2016 நாள்:06.05.2016 ன் பிரகாரம் பெற்றுக்கொண்டு கொடுத்த ரசீதினை கனம் காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்ததாகவும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார்கள் எனவும், சாட்சியம் அளித்துள்ளார்.

15) அ.சா.10 ஆனந்தக்குமார் தனது சாட்சியத்தில், தான் தற்போது காரைக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 13.03.2016 அன்று தான் பணியில் இருந்தபோது மதியம் 01.40 மணியளவில் காரைக்குடி டி.டி நகரைச் சேர்ந்த பழனியப் செட்டியார் மகன் இராமநாதன் என்பவர் சிகிச்சைக்காக கணேசன் என்ற நபரால் அழைத்து வரப்பட்டதாவும், அவரை விசாரித்த போது அவர் இனம் தெரிந்த ஒரு நபர் 13.03.2016 அன்று மதியம் 01.15 மணியளவில் அரிவாளால் தாக்கியதாக கூறியதாகவும், அவரை பரிசோரனை செய்தபோது 7 X 7 செமீ அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம், தலையின் இடது பக்கத்தில் வெட்டுக்காயம் இருந்ததாகவும், 7 X 4 செ.மீ அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் வலது

முழங்காலில் இருந்ததாகவும், 15 X 5 செ.மீ எலும்பு அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் வலுதுபக்க இடுப்பின் பின்புறம் இருந்ததாகவும், 15 X 5 செ.மீ சதை அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் இடது தொடையில் இருந்ததாகவும், 10X 5 செ.மீ சதை அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் இடது தொடையின் முழங்கால் அருகே இருந்ததாகவும், 5X 2 செ.மீ சதை அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் இடது கையில் இருந்ததாகவும், அவருக்கு தகுந்த முதல் உதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார்கள் எனவும், சாட்சியம் அளித்துள்ளார்.

16) அ.சா.11 M.பிச்சைபாண்டியன் தன் சாட்சியத்தில், தான் தற்போது காவல் ஆய்வாளராக பணி ஓய்வு பெற்று தேனியில் குடியிருந்து வருவதாகவும், இதற்கு முன்னால் கடந்த 13.03.2016 ம் தேதி பகல் 14.45 மணியளவில் காரைக்குடி வடக்கு காவல் நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.விஜயக்குமார் என்பவர் அரசு மருத்துவமனை காரைக்குடியில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த இராமநாதன் த/பெ.பழனியப்பச் செட்டியார் என்பவரிடம் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.130/2016 பிரிவுகள் 294(பி), 307 இதச பிரிவுகளாக வழக்கு பதிவு செய்திருந்ததாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கையை முறையாக உயர் அதிகாரிகளுக்கும், நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்துவிட்டு அதன் மற்றொரு பிரதியை மேல் விசாரணைக்கு தனக்கு கொடுத்ததை பெற்று 13.03.2016 ம் தேதி பகல் 15.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகளான செல்வம் மற்றும் பாண்டி ஆகியோர் முன்பாக பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும்,

பின்னர் சம்பவ இடத்தில் படிந்திருந்த இரத்தம் பட்ட மண் மற்றும் இரத்தம் படாத மண் ஆகியவைகளை அதே சாட்சிகள் முன்பாக தனித்தனியாக எடுத்து அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், பின்னர் சாட்சிகள் கணேசன், ஆறுமுகம், சிதம்பரம், செல்வம் மற்றும் பாண்டி ஆகியோர்களை தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை தேடியதில் தலைமறைவாக இருந்ததாகவும், மேலும் கடந்த 14.03.2016 ம் தேதியன்று சாட்சிகள் பழனியப்பன், பூங்கோதை மற்றும் சபாரெத்தினம் ஆகியோர்களை விசாரித்தும், அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்தும், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த வாதி இராமநாதனை விசாரித்து அவர் வாக்குமூலத்தையும் பதிவு செய்து மேலும் கடந்த 18.03.2016 ம் தேதி சாட்சி இராமையாவை விசாரித்து அவரின் வாக்குமூலத்தையும் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் சட்டப்பிரிவான 294(பி), 307 இதசவின் படி சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் மற்றும் தனது விசாரணையின் அடிப்படையிலும் சட்டப்பிரிவுகள் 294(பி), 120(பி), 109 மற்றும் 307 இதசவாக மாறுதல் அறிக்கை தயார் செய்து மாண்புமிகு காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் கடந்த 27.03.2016 ம் தி பகல் 13.00 மணிக்கு எதிரி இராஜேஸ்குமார் என்பவர் காரைக்குடி புதிய பேருந்து நிலையம் முன்பு வைத்து சுற்றி வளைத்து விசாரித்ததாகவும், அப்போது அவர் தனது பெயர் மற்றும் முகவரியை சரியாக கூறியதால் இவ்வழக்கு சம்பந்தமாக விசாரிக்க கேட்டபோது அவர் தானாக முன்வந்து எவ்வித வற்புறுத்தலோ, அச்சுறுத்தலோ இன்றி சாட்சிகள் மணிகண்டன் மற்றும் ஆனந்தக்குமார் ஆகியோர் முன்பாக கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்றதாகவும், மேலும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால் செட்டியாரை வெட்டுவதற்கு பயன்படுத்திய அரிவாளை மறைத்து வைத்த இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று கூறியதன் அடிப்படையில் மேற்படி எதிரியுடன் சாட்சிகளையும் உடன் அழைத்து சென்று கடந்த 27.03.2016ம் தேதி பகல் 15.30 மணிக்கு வள்ளுவர் நாகர் 3வது வீதி அருகில் உள்ள காட்டு புதரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 1.5 அடி நீளமுள்ள அருவாள் ஒன்று இரத்தக்கரை படிந்ததை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், மேலும் இவ்வழக்கின் மற்ற எதிரிகளான கார்த்திகேயன் மற்றும் லதா என்பவரை அவர்களது வீடு முன்பாக வைத்து கைது செய்து, கைது செய்த விபரத்தை அவர்களது உறவினர்களுக்கு தெரிவித்து எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துகளுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து முறையாக வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் கைப்பற்றிய சொத்தை படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி பி.ஆர்.75/2016 பெற்றதாகவும், மேற்படி தடய சொத்தை இராமநாதபுரம் இரசாயன பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி பரிசோதனை அறிக்கை பெற்றுத்தர நீதிமன்றத்திற்கு கடிதம் கொடுத்து, பரிசோதனை அறிக்கை பெற்றதாகவும், பரிசோதனை அறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் திரு.வைரமுத்து அவர்களை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் இவ்வழக்கின் சாட்சிகள் ஆனந்தக்குமார், மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், காயம் பட்டவருக்கு சிகிச்சை வழங்கிய காரைக்குடி அரசு மருத்துவனை மருத்துவர் திரு.ஆனந்தக்குமார்

மற்றும் மீனாட்சி மிஷன் மருத்துவனை மருத்துவர் திரு.தீனதயாபாரன், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.விஜயக்குமார் காரைக்குடி வடக்கு காவல் நிலையம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் 1வது எதிரி தொடர்ந்து தலைமறைவாக இருந்ததாகவும், மாண்புமிகு சிவகங்கை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளதாகவும், மேலும் இவ்வழக்கில் தன் விசாரணையை முடித்து கடந்த 10.06.2016ம் தேதி எதிரிகள் இராஜசேகரன், இராஜேஸ்குமார், கார்த்திகேயன். லதா ஆகியோர்கள் மீது பிரிவுகள் 294(பி), 109, 120(பி), 307 இதச உடன் இணைந்த 34 இதசவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

17) அரசு தரப்பு சாட்சியங்களில் 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக உள்ள சங்கதிகளை பிரித்தெடுத்து எதிரிகளுக்கு விளக்கி அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவ எதிரிகள் குற்றத்தினை மறுத்தனர். எதிரிகள் தங்களுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று குறிப்பிட்டனர். ஆனால் எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ விசாரிக்கப்படவில்லை. எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

18) இந்த வழக்கில் தீர்விற்குரிய பிரச்சனை யாதெனில், 2 முதல் 4 எதிரிகள் மீது அரசு தரப்பால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

19) அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், ராமநாதன் என்பவரை முன்விரோதத்தின் காரணமாக 1ம் எதிரி ராஜசேகரன் அரிவாளால் வெட்டி, அதன் அடிப்படையில் அவருக்கு காயம்

ஏற்பட்டு, அதற்கு உடந்தையாக 2 முதல் 4 எதிரிகள் இருந்ததாக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின், சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது என்றும், சாட்சியை 1ம் எதிரி தாக்கினார் என்பது சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரிய வருகின்ற நிலையிலும், அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், புலன்விசாரணை அதிகாரியும் சரிவர புலன் விசாரணை மேற்கொண்டு, எதிரிகள் மீதான குற்றத்தினை நிரூபித்துள்ளார் என்ற நிலையில், அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் எதிரிகளை தண்டிக்குமாறு வாதிட்டார்.

20) இவ்வழக்கில் 1ம் எதிரி இறந்து விட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்று போய்விட்டது. 2 முதல் 4 எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், இவ்வழக்கில் சாட்சிகள் அனைவரும் 1ம் எதிரி குறித்தே சாட்சியம் அளித்துள்ளனர் என்ற நிலையில், 2 முதல் 4 சம்பவ இடத்தில் இருந்ததாகவோ, அவர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாகவோ, அவர்கள் செயலினால் தான் சாட்சிக்கு காயம் ஏற்பட்டதாகவோ, சாட்சிகளின், சாட்சியத்தில் இருந்து அறிய வராத நிலையில், இவ்வழக்கினை பொருத்தமட்டில் 2 முதல் 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்றும் சாட்சிகளும் மேற்கண்ட நபர்கள் குறித்து சாட்சியம் அளிக்காத நிலையில், இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால், எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

21) இரு தரப்பு வாதங்களும் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கில், 1ம் எதிரி மீது இதச பிரிவு 294(b), 120(b), 307 ன் கீழும் 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக

120(b), 307, r/w 34ன் கீழும் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே இந்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட வேண்டும்.

22) இவ்வழக்கினை பொறுத்தமட்டில், 1ம் எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டு, சாட்சியை அரிவாளால் வெட்டினார் என்பது அரசு தரப்பு வழக்கு என்ற நிலையில், அவர் இறந்து விட்டதால் அவருக்கு எதிரான வழக்கானது அற்று போய்விட்டது. 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 120(b), 109, 307, r/w 34 நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து இந்நீதிமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கினை பொருத்தமட்டில் புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் 4 எதிரிகள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டும் வனையப்பட்டுள்ளது.

23) எதிரிகள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலிக்கையில், அ.சா.1 வழக்கின் புகார்தாரரான ராமநாதன் தனது சாட்சியத்தில், தனது வீட்டில் உள்ள தங்கள் குடும்பத்திற்கு சொந்தமான கண்டனூர் ரோடு காரைக்குடியில் உள்ள லைன் வீட்டில் உள்ள போர்வெல்லில் உள்ள மோட்டரை 1வது எதிரி ராஜா என்ற ராஜசேகர் திருடி சென்றது காரணமாக புகார் கொடுத்திருந்ததன் அடிப்படையில், அவர் வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறைக்கு சென்று விட்டதால் அந்த முன்விரோதத்தின் காரணமாக தன்னை மிரட்டிக் கொண்டிருந்ததாகவும், பின்னர் ராமையா என்பவரும் ரமேஷ் என்பவரும் அ.சா.1டம் வந்து 1ம் எதிரி அவரை கொல்ல சதி திட்டம் தீட்டி கொண்டிருப்பதாகவும், லதா, ராஜேஷ் குமார், கார்த்திக்ராஜா என்ற ராஜசேகர் ஆகியோரும் இதுகுறித்து பேசிக் கொண்டிருந்ததாகவும் தன்னிடம் கூறினார்கள் என்றும், இதுகுறித்து தான் பெரிதாக எடுக்கவில்லை என்ற நிலையில்,

13.03.2016 ம் தேதி மதியம் 1.15 மணிக்கு கார்த்திக் என்பவரையும், ராஜேஷ்குமார் என்பவரையும் வேவு பார்க்க வைத்து 1ம் எதிரி தன் வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி, கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அரிவாளை வைத்து தலையின் இடது பக்கம், இடது கை, இடுப்பின் பின்பக்கம், வலதுபுறம் வலது கால் முட்டி, இடது கால் தொடை, முட்டிகளில் சரமாரியாக வெட்டியதாகவும், இத்தோடு நீ செத்தாய், தொலைந்து விட்டாய் என கூறியதாகவும், அதன் பின்னர் இதுகுறித்து தான் ஆறுமுகம் மற்றும் கணேசனிடம் கூறியதாகவும், அதன் பின்னர் எதிரி கொலை மிரட்டல் விடுத்துவிட்டு ஓடிவிட்டதாகவும், இதுசம்பந்தமாக புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட அரிவாள் சா.பொ.1 எனவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, "எதிரி மற்றும் தனது குடும்பத்தாரிடையே சொத்து குறித்த பிரச்சனை இருந்து வருவதாகவும், ஏற்கனவே 1ம் எதிரி மீது தான் புகார் அளித்ததன் அடிப்படையில், அவர் சிறைக்கு சென்றதால் தன்மீது அவருக்கு முன்விரோதம் இருந்ததாகவும், தன்னிடம் 2 முதல் 4 எதிரிகள் சதி திட்டம் செய்ததாக கூறியது திலகா என்றும், இதுகுறித்து போலீஸ் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றும், தான் ஏன் சொல்லவில்லை என்றால் தனக்கு இதுகுறித்து பயம் ஏற்படவில்லை என்றும், சதிதிட்டம் தீட்டியது குறித்து தனக்கு நேரடியாக தெரியாது" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து சம்பவத்தில் 1வது எதிரி ஈடுபட்டதும் அவர் அசிங்கமாக பேசி, காயம் ஏற்படுத்தியதாகவுமே தெரிய வருகிறது.

24) அ.சா.2 கணேசன் என்பவர் அரசு தரப்பால் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியாவார். அவர் தனது சாட்சியத்தில், 13.03.2016ம் தேதி மதியம் சுமார் 1 மணிக்கு மேல் பூச்செடி

கடை நடத்தி வரும் ஆறுமுகம் தன்னிடம் அப்பச்சியை வெட்டி விட்டார்கள் என்று கூறியதாகவும், அப்போது அங்கு சென்று பார்த்தபோது, அவர் காயத்தோடு இருந்ததாகவும், ராஜா என்பவர் வெட்டி விட்டு சென்றுவிட்டதாக அவர் சொன்னதாகவும், தான் சிகிச்சைக்கு அழைத்து சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, "தான் சம்பவம் நடைபெற்று கால் மணி நேரத்திற்கு பின் சென்றதாகவும், தானும், ஆறுமுகம் என்பவரும் ஒரே நேரத்தில் சென்றதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

25) சம்பவத்தை கேள்விபட்டதாக சொல்லப்படும் மற்றொரு சாட்சியான ஆறுமுகம் என்பவர் தனது சாட்சியத்தில், 13.03.2016 ம்தேதியில் தான் பூச்செடி கடையில் நின்று கொண்டிருந்த போது அ.சா.1 ரத்தக் கறையுடன் வீட்டின் கேட்டிற்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், தானும் கணேசன் என்பவரும் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் குறுக்கு விசாரணையின்போது, மருத்துவமனைக்கு காயம்பட்ட நபரை அழைத்து சென்றது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

26) அ.சா.4 சிதம்பரம் என்பவரும் தனது சாட்சியத்தில், 13.03.2016 மதியம் 1.30 மணியளவில் ராமநாதன் தனக்கு போன் செய்து ராஜா என்ற ராஜசேகர் அவரை வெட்டி விட்டதாகவும், தான் மருத்துவமனையில் இருப்பதாகவும், சொன்னதன் அடிப்படையில் தான் அவரை சென்று பார்த்ததாகவும், அவரை மேல் சிகிச்சைக்காக மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சேர்த்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணையின்போது, சம்பவம் தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

27) அ.சா.5 பழனியப்பன் தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியும் என்றும், தன்னிடம் கணேசன் என்பவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது தகப்பனார் ராமநாதனை 1ம் எதிரி அசிங்கமாக பேசி, வெட்டி விட்டதாக கூறினார் என்றும் அவரை மருத்துவமனையில் சேர்த்து விட்டதாக தனக்கு தகவல் கிடைத்ததாகவும், முதலில் காரைக்குடி அரசு மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று, அதன் பின்னர் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவரும் தங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் இடையே வழக்கு நடைபெற்று வருவதாகவும், சம்பவம் குறித்து தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

28) அ.சா.6 கணேசன் என்பவர் தனது சாட்சியத்தில், காயம்பட்ட நபர் தனது கணவர் என்றும் சம்பவம் குறித்து தனக்கு தெரிய வந்ததாகவும், தங்கள் குடும்பத்திற்கு இடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் நேரடியாக தெரியாது எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

29) அ.சா.7 சபாரத்தினம் என்பவர் தனது சாட்சியத்தில், எனக்கு சம்பவம் குறித்து தெரிய வந்ததாக சாட்சியம் அளித்துவிட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, சம்பவம் எப்போது நடந்தது என்று தனக்கு நேரடியாக தெரியாது என்றும், சம்பவத்தை பற்றி தன் அண்ணிக்கு போன் மூலமாக கேள்விப்பட்டு அவர் சொன்னார் என்றும், சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் குறித்தும் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

30) அ.சா.8 ராமய்யா தனது சாட்சியத்தில், அ.சா.1 மற்றும் 1ம் எதிரி இடையே சொத்து சம்பந்தமான பிரச்சனை இருந்ததாகவும், சம்பவ தினத்தன்று தான் ஊரில் இல்லை என்றும் மறுநாள் சம்பவம் குறித்து

தனக்கு தெரிய வந்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, அவர் சம்பவம் குறித்து செவி வழியாக தெரிந்து கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

31) அ.சா.9 முத்தரசன் என்பவர் தான் வழக்கு சம்பவ சான்று பொருட்களை ராமநாதபுரத்தில் உள்ள தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொடுத்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

32) அ.சா.10 ஆனந்தகுமார் மருத்துவர் தனது சாட்சியத்தில், ராமநாதன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளித்து விட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது, காயத்தின் தன்மை குறித்து தான் எதுவும் கூறவில்லை என்றும், காவல் நிலையத்தில் இருந்து பொதுவாக சிகிச்சை சொல்ல கூறியிருந்தால் குறிப்பாணையுடன் வருவது வழக்கம் என்றும், இவ்வழக்கில் அவ்வாறு குறிப்பாணை எதுவும் கொண்டு வரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

33) அ.சா.11 பிச்சைபாண்டியன், காவல் ஆய்வாளர் தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

34) இவ்வழக்கினை பொருத்தமட்டில், அ.சா.1 ஐ தவிர பிற சாட்சிகள் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவர். அ.சா.1ம் தனது சாட்சியத்தில் 1ம் எதிரி தன்னை அசிங்கமாக பேசி, அரிவாளால் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 2 எதிரிகள் வெளியில் நின்றதாக கூறி இருந்தாலும் அவர்கள் குறித்து குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மாறாக, அவர்கள் நின்றது குறித்தும் குறிப்பான சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட பிற சாட்சிகள் அனைவரும் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் என்ற நிலையில், மேற்கண்ட சாட்சிகள் யாரும் எதிரிகள் குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் பிற எதிரிகள் சதி திட்டம் தீட்டியது குறித்தும்

தங்களுக்கு நேரடியாக தெரியாது என சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 தனது சாட்சியத்தில் கூறியுள்ள ராமையா மற்றும் ரமேஷ் இருவரும் அரசு தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட நிலையில், அவர்களும் எதிரிகள் 2 முதல் 4 அ.சா.1 ஐ கொலை செய்ய சதி திட்டம் தீட்டியதாக சாட்சியம் எதுவும் குறிப்பிட்டு அளிக்கவில்லை. மாறாக, சாட்சியம் அளித்த நபர்கள் அனைவரும் சம்பவத்தை நேரில் தெரியாது எனவே சாட்சியம் அளித்துள்ளார்கள்.

35) அரசு தரப்பில் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது சாட்சியமும் அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டது குறிப்பாக சாட்சியமளிக்கப்பட்டிருந்தாலும், மருத்துவ அறிக்கையிலும் ஒரு நபர் வந்து தாக்கியதாகவே உள்ளது. இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து குறிப்பிட்டு சொல்லியிருந்தாலும் அவர் தனது சாட்சியத்தில், திலகா ரமேஷ் என்பவர் சொல்லித்தான் எதிரிகள் அனைவரும் கொலை செய்ய வேண்டும் என்ற சதித்திட்டம் தீட்டியதாக சொல்லி உள்ள நிலையில், திலகா என்பவர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் சதித்திட்டம் தீட்டப்படுவதாக சொல்லப்படுவது குறித்த தனக்கு புகார் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்பதாகவும் அவர் சாட்சியம் அளித்துள்ளார்.

36) எனவே இவ்வழக்கினை பொருத்தமட்டில் அ.சா.1 ஐ எதிரி அசிங்கமாக பேசி, அவரை அரிவாளால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரிய வந்ததாலும் அவர் இறந்து விட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய்விட்டது. 2 முதல் 4 எதிரிகள் சதி திட்டம் தீட்டி உடந்தையாக இருந்ததாக அரசு தரப்பில் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு,

குற்றச்சாட்டும் அது பொறுத்து வனையப்பட்டுள்ள நிலையில், சம்பவ இடத்தில் அந்த எதிரிகள் இருந்தார்களா என்பது குறித்தும் அவர்கள் சதித்திட்டம் தீட்டியது குறித்தும், அவர்களின் சதித்திட்டத்தின் அடிப்படையிலேயே சம்பவம் அரங்கேறி உள்ளதாகவும் சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரிய வராத நிலையில், புலன் விசாரணை அதிகாரியும் இது குறித்து சரிவர புலன் விசாரணை செய்து 2 முதல் 4 எதிரிகள் மீதான குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில், மருத்துவர் சாட்சியத்திலிருந்தும் அங்கு வேறுஎதிரிகள் இருந்ததாக தெரிய வராத நிலையில், இவ்வழக்கினை பொருத்தமட்டில், 2 முதல் 4 எதிரிகள் தொடர்பாக சாட்சிகள் சாட்சியம் அளிக்காத நிலையில், மேற்கண்ட எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 2 முதல் 4 எதிரிகள் மீதான இதச பிரிவு 120(b), 307 r/w 34 IPC ன் படியான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே மேற்கண்ட பிரிவுகளின் கீழ் எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

37) எனவே, அரசு தரப்பால் 2 முதல் 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், குற்றம் சாட்டபட்ட நபர் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, அவர்களை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, 1ம் எதிரிக்கு எதிரான குற்றச்சட்டு அற்றுப்போய்விட்டது. 2, 3, 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120(b), 109, 307 r/w 34 IPC ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால்

சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, அவர்களை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் அவரால் கொடுக்கப்பட்ட பிணை முறி ஆவணங்கள் அனைத்தும் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட அருவாள் அ.சா.பொ.1 ஆகவும், அ.சா.பொ.2 இரத்தம்படாத மண், அ.சா.பொ.3 இரத்தம்பட்ட மண் ஆகிய பொருட்களை பொறுத்து உரிய வழிமுறையாக மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்து அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 30ம் நாள் பகரப்பட்டது.

KALAINILA Digitally signed by KALAINILA

உதவி அமர்வு நீதிபதி,
தேவகோட்டை.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | ராமநாதன் |
| 2 | அ.சா.2 | கணேசன் |
| 3 | அ.சா.3 | ஆறுமுகம் |
| 4 | அ.சா.4 | சிதம்பரம் |
| 5 | அ.சா.5 | பழனியப்பன் |
| 6 | அ.சா.6 | பூங்கோதை |
| 7 | அ.சா.7 | சபாரெத்தினம் |
| 8 | அ.சா.8 | ராமையா |
| 9 | அ.சா.9 | முத்தரசன் |
| 10 | அ.சா.10 | டாக்டர்.ஆனந்தகுமார் |

| | | |
|---|---|---|
| 11 | அ.சா.11 | பிச்சைப்பாண்டியன் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| 2 | அ.சா.ஆ.2 | விபத்து பதிவேடு |
| 3 | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| 4 | அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| 5 | அ.சா.ஆ.5 | வரைபடம் |
| 6 | அ.சா.ஆ.6 | அத்தாட்சி |
| 7 | அ.சா.ஆ.7 | சாட்சி கையெழுத்து |
| 8 | அ.சா.ஆ.8 | சாட்சி கையெழுத்து |
| 9 | அ.சா.ஆ.9 | அத்தாட்சி |
| 10. | அ.சா.ஆ.10 | படிவம் 91 |
| 11 | அ.சா.ஆ.11 | படிவம் 91 |
| 12 | அ.சா.ஆ.12 | தடவியல் பரிசோதனை அறிக்கை |
| 13 | அ.சா.ஆ.13 | காயச் சான்று |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :**

அ.சா.பொ.1 – அருவாள்

அ.சா.பொ.2 – இரத்தம் படாத மண்

அ.சா.பொ.3 – இரத்தம் பட்ட மண்

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்:**

– இல்லை –

KALAINILA Digitally signed by KALAINILA

உதவி அமர்வு நீதிபதி,
தேவகோட்டை.

**குறிப்பு**

1. வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. எதிரி இன்று விடுதலை செய்யப்பட்டார்.
4. கூடுதல் அரசுக் குற்றத்துறை வழக்குரைஞருக்கு தீர்ப்பிரையின் நகல் வழங்கப்பட்டது.